# உதயன்

விலை ரூபா 6-00

மலர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 பங்குனி 25 வியாழக்கிழமை (08-04-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 113


# ஒரு மாகாண சபையில் மட்டுமே அரசுக்கு அறுதிப் பெரும்பான்மை!

## ஏனைய நான்கிலும் கூட்டாட்சி அமையலாம்

கொழும்பு, ஏப்ரல் 8


தெற்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களில் ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி சகல மாகாண சபைகளிலும் முன்னணியில் நிற்கிறது. ஆனால் வட மத்திய மாகாணசபை தவிர்ந்த ஏனைய நான்கு மாகாணசபைகளிலும் தனித்து ஆட்சி அமைக்கும் அறுதிப் பெரும்பான்மையை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பெறத் தவறிவிட்டது.

மேல்மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் ஊவா, சப்பிரகமுவ, வடமத்திய மாகாணசபைகளுக்கு இந்தத் தேர்தல் நடத்தப்பட்டது தெரிந்ததே.

வடமத்திய மாகாண சபையில் உள்ள 31 ஆசனங்களில் 17 ஆசனங்களைப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கைப்பற்றி ஆட்சி அமைக்கும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. அங்கு ஐ. தே. க. 12 ஆசனங்களையும் ஜே. வி. பி. இரு ஆசனங்களையும் பெற்றுள்ளன.

(9 ஆம் பக்கம் பார்க்க)





யாழ். துரையப்பா ஸ்ரேடியத்தில் நேற்று இடம்பெற்ற அகழ்வுப்பணிகளை யாழ். மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் மேற்பார்வை செய்வதை முதலாவது படத்தில் காணலாம். புதைகுழியில் இருந்து முழுமையாக மீட்கப்பட்ட எலும்புக்கூடு இரண்டாவது படத்தில் காணப்படுகிறது. படங்கள்: எஸ். மணிவண்ணன்—

## தென்பகுதிக்கு அப்பால் தாழமுக்கம்

கொழும்பு, ஏப்ரல் 8

நாட்டின் தென் பகுதிக்கு அப்பால் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக இன்று வியாழக்கிழமை காலை முதல் மாலை வரை நாட்டின் பல பகுதிகளிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது

## படையினர் தேடுதல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

திருநெல்வேலி மேற்குப் பகுதி நேற்றுக் காலை முதல் படையினரால் தீவிர தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

வீடுவீடாகச் சென்ற படையினர் குடும்பப்பதிவு அட்டைகளைப் பார்வையிட்டனர்.

இதேவேளை நல்லூர்க் கந்தசுவாமி ஆலய சுற்றாடல் பகுதியிலும் கடந்த சில நாள்களாக படையினர் திடீர் சோதனைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.


தேர்தல் முடிவுகள் ஒரே பார்வையில் பக்கம் 9இல்


## பொ. ம. ஐ. முன்னணிக்கு ஆதரவு குறைகின்றது

### விமர்சகர்கள் கருத்து

கொழும்பு, ஏப்ரல் 8

நடந்து முடிந்த ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தல் முடிவுகள் ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு குறைவதையே காட்டுவதாக கொழும்பு அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் 63 சத வீதமாகவும், பொதுத் தேர்தலில் 48 சத வீதமாகவும் இருந்த பொது மக்கள் முன்னணியின் ஆதரவு இந்தத் தேர்தலில் மூன்று சத வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்தத் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு 45சதவீத வாக்குகளும் ஐ.தே.கவுக்கு 42 சத வீத வாக்குகளும் இ. தொ. காவுக்கு 3 சத வீத வாக்குகளும் ஜே. வி. பிக்கு 5 சத வீத வாக்குகளும் கிடைத்துள்ளன.

இ. தொ. காவின் செல்வாக்கும் வீழ்ச்சியடைந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஸ்ரேடியப் புதைகுழியிலிருந்து மேலும் 3 எலும்புக்கூடுகள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

யாழ். துரையப்பா விளையாட்டரங்கின் மேற்குப் புறத்தில் காணப்படும் மனிதப் புதைகுழி நேற்றுத் தோண்டப்பட்ட போது ஓர் எலும்புக் கூடு முழுமையாக மீட்கப்பட்டது. மேலும் இரு எலும்புக் கூடுகளுக்குரிய மண்டை ஓடுகள், எலும்புகள் மற்றும் எச்சங்களும் முழுமையாக மீட்கப்பட்டன.

இன்னும் குறைந்தது மூன்று எலும்புக்கூடுகளாவது அங்கு இருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்று மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளில் உடுப்புகள் எதுவும் காணப்படவில்லை. தலைமுடியும் இருக்கவில்லை.

அடையாளம் காணக்கூடிய தடயப் பொருள்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்த மனிதப் புதைகுழி அகழ்வு வேலைகள் நேற்றுக் காலை 8-00 மணியளவில் யாழ்.மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.வி.ஸ்ரீராஜேஸ்வரனின் உதவியுடன் நடைபெற்றன. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி செல்வி கௌரி சுந்தரலிங்கமும் சமுகமளித்திருந்தார்.

இந்த அகழ்வு வேலைகள்

### இன்றும் அகழ்வுப் பணி

ஆரம்பிக்கப்படுவதற்கு முன் புதைகுழிப் பகுதியின் மண் சட்ட வைத்திய அதிகாரியினால் சேகரிக்கப்பட்டு பொதி செய்யப்பட்டது.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பியின் ஆதரவு எந்தக் கட்சிக்கும் இல்லை

தேர்தல் நடைபெற்று முடிந்த மாகாண சபைகளில் தமது கட்சி எந்த கட்சியுடனும் இணைந்து ஆட்சி அமைக்கும் உத்தேசம் இல்லை என்று ஜே வி. பி. பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எம்மைப் பொறுத்த வரை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஐ. தே.கவும் ஒன்றுதான்; கடந்த 71 ஆம், 88ஆம் ஆண்டுகளில் எமக்கு எதிராக அவை நடந்து கொண்ட விதம் இதற்குச் சான்றாகும்.

மாகாணசபைகளில் எதிர்க்கட்சியில் இருந்தே நாம் செயற்படுவோம். எதிர்க்கட்சியில் இருந்து எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து இன்று அல்லது நாளை கூடி முடிவு செய்வோம்—

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3-21)

## கொழும்புத் தமிழரின் சந்தர்ப்பவாத அரசியல்

### தொண்டா குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்ரல் 8

கொழும்பு வாழ் தமிழர்கள் இனத்தைப் பற்றிச் சிந்திக்காமல் சந்தர்ப்பவாதமாகச் செயற்பட்டுள்ளனர்.

இப்படி அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

''தமது இனத்தின் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம் என்பனவற்றைக் கருத்தில் கொள்ளாமல் வியாபார நோக்கில் கொழும்புவாழ் தமிழர்கள் செயற்பட்டுள்ளார்கள் என்று தொண்டமான் மேலும் கூறினார்.

'மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் நெருக்கமாக வந்திருப்பது கவலை தருவதாக உள்ளது என்று அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு மக்கள் தெளிவான பதிலடிகொடுத்துவிட்டார்கள் என்று ஐ. தே. க பொதுச் செயலாளர் காமினி அத்துக்கொறள தெரிவித்தார். (இ-3-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதிய மாணவர் தெரிவு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் இயங்கும் தாதியர் பயிற்சிப் பாடசாலைகளில் பயிற்சிநெறியினைப் பெறுவதற்கான தாதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக கடந்த மாதம் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தெரிவான பரீட்சார்த்திகளுக்கான எழுத்துப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெற உள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலை தாதியர் பயிற்சிப் பாடசாலையிலும், யாழ். போதனா வைத்தியசாலை, மருத்துவ பீட விரிவுரைமண்டபத்திலும் பரீட்சை நடைபெறும்.

வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து விமானம் மூலம் எடுத்துவரப்பட உள்ளன.

(ஐ-15-139-173-17)

# ஏழாலைப் பகுதியில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

ஏழாலைப் பகுதியில் சந்தேகத்தின் பேரில் இருவர் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கந்தையா அழகேந்திரன் (வயது 46), சிவவிநாயகமூர்த்தி உதயசூரியன் (வயது 24) ஆகியோரே கைதானவர்கள் ஆவர்.

இவர்கள் கைது செய்யப்பட்டதற்கான ரசீதுகள் படையினரால் இவர்களது உறவினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (இ-ரீ)

# சீரற்ற நிலையில் மின் விநியோகம்

கோண்டாவில், ஏப்ரல் 8

கொக்குவில் பொற்பதி வீதிப் பகுதிகளில் கடந்த சில வாரங்களாக மின் விநியோகம் சீரின்றி உள்ளது.

மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை மின் குமிழ்கள் பிரகாசமற்ற நிலையிலேயே ஒளிர்கின்றன. ஏனைய மின் உபகரணங்கள் தொழிற்படுவதிலும் தடங்கல்கள் ஏற்படுகின்றன. (ஐ - ரி)


**விக்னா**
கல்வி நிறுவனம்

**கணக்கீடு**
திரு. பாலவாசன்
A/L 2000
**பங்குடைமை**

பிரிவு I 7–8 ] சனி
பிரிவு II 1–2 ] ஞாயிறு

**ஆரம்பம்:**
10 - 04 - 99 சனி

குறிப்பு:
வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு 2 வாரத்திற்குப் பின் எக் காரணம் கொண்டும் மேலதிக அனுமதிகள் வழங்கப்பட மாட்டாது.
(64585)


# விஞ்ஞான சங்க அமர்வில் இன்று

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

யாழ். விஞ்ஞான சங்கத்தின் ஏழாவது ஆண்டு நிகழ்வில் இன்று நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:

இடம்:- யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடம், பௌதீக விரிவுரை மண்டபம்.

★ காலை 9. 00 — 2. 30 தூய, பிரயோக, மருத்துவப் பிரிவு ஆய்வரங்குகள்.

★ 2. 45 மணி—சமூக விஞ்ஞான பிரிவு தலைமையுரை—1996 இன் பின்னரான யாழ். மாவட்ட குடித்தொகை சார் மாற்றங்கள். பேராசிரியர் கா. குகபாலன்.

★ 3. 30:- பேராசிரியர் எம். சிவசூரியா—மருத்துவ அறிவியல் மீள் ஆய்வு விரிவுரை.


**பிற்போடப்பட்டுள்ளது**
**வினாடி - வினாப் போட்டி 1999**

எமது மன்றத்தா[ல்] 8 ஆம், 9 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்[லூ]ரியில் நடத்தப்படவிருந்த வினாடி வினா போட்டி [..] ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

குறிப்பு: ★ தெரிவு செ[ய்ய]ப்பட்ட 16 பாடசாலைகளும் 9 ஆம் திகதி 9. 00 மணிக்கு (புதியநேரம்) யாழ். மத்தி[ய] கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் [கொ]ள்கின்றோம்.

★ ஆர்வமுள்[ளோ]ர் பார்வையாளராக கலந்து கொள்ளலாம்.

முகாமைத்துவ மாணவர் மன்றம்
யாழ். பல்கலைக்கழகம்.

(64596)

**SCIENCE COLLEGE**
வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.

**PHYSICS**

A/L 2001 — ★ அடிப்படை
சனி, ஞாயிறு — 10 00 - 11-00

A/L 2000 — ★ வெப்பவியல்
சனி, ஞாயிறு — 7-30 - 9-00

A/L 2000 — ★ அலைகளும், அதிர்வுகளும்
சனி, ஞாயிறு — 9-00 - 10-00

A/L 99 — ★ சடத்தின் பொறியியல் இயல்புகள்
சனி, ஞாயிறு — 6-30 - 7-30

**10-04-1999**

திரு. சம்பந்தன் B,sc

(64594)

**ராஜா**
யாழ்ப்பாணம்.

சூரியா - முரளி - ஜீவிதா
ரசிகா = மணிவண்ணன்
விவேக் - ராதிகா - நாஸர்
மற்றும் பலர் நடித்த

**காதலே நிம்மதி**

இன்று காட்சிகள்
10-30, 2-00
(சி/7009)

**நாகம்ஸ்**
சுன்னாகம்.
இன்று
கார்த்திக், தேவயானி
மணிவண்ணன் நடித்த

**உதவிக்கு வரலாமா**

புதிய நேரப்படி காட்சிகள்
11-00, 2-30
(64580)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
இன்று முதல்
அரவிந்தசாமி - கோபிகா
பிரகாஷ்ராஜ் நடித்த

**என் சுவாசக் காற்றே**

காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரம்)

FAX No. 070 - 212223
FOREIGN T P No.
0094 - 70-212223
(சி/7116)

**புதுவருட மலிவு விற்பனை!**

**பட்டுச்சேலைகளின் ஒரே சோலை**



**ராகம்ஸ் பட்டுச்சோலை**

உங்கள் இதயத்தை மீட்டிட இதோ!
"ராகம்ஸ்" இன் இன்றைய அழகுத் தினுசுகள்!

நங்கையர்க்கேற்ற றோ சில்க் — செம சில்க் — றியல் Fபீல்
சிக்வோய் — ரைற்றானிக் — கஜ[ு] அஞ்சீர் — ரீசம் கட்லாஸ்
டெம்பஸ்கன் — பென்டெக்ஸ்கன் மற்றும்
படையப்பா — என்றென்றும் காதல் — மன்னவர் சின்னவரு
துள்ளாத மனமும் துள்ளும் — தேவி — சூரியபார்வை — பூவேலி
லவ்ஸ்டோரி — மூன்லைட் ஆகிய புத்தம்புதிய ரக
வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சாறி வகைகள் மற்றும்

★ கவுண் வகைகள் ★ ஸ்கேட் அன் பிளவ்ஸ்
★ சிறுவர்களுக்கேற்ற பேபி சூட் ★ ஆடவர் மனங்கவர் சேட்
★ ரீசேட் வகை அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்! முந்துங்கள்!!

**புதுவருட மலிவு விற்பனை**

**ராகம்ஸ் பட்டுச் சோலை**

24, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

பிரதான வீதி,
சங்கானை.

(சி/7115)


# மரண அறிவித்தல்கள்

## திருவிளங்கம் இரபீந்திரநாத்

பொறியியலாளர், பாஹ்ரையின் [Bahrain]

அராலியைப் பிறப்பிடமாகவும் 19/1, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை மேற்கில் வசித்துவந்தவருமான திருவிளங்கம் இரபீந்திரநாத் பாஹ்ரைனில் (Bahrain) 05-04-99 இல் காலமானார்.

அன்னார் ஆதிதேவியின் அன்புக் கணவரும் மாணிக்கரத்தினத்தின் மருமகனும் ஜெய்சங்கரி (Bahrain), சாயிபிரகாஸ், ஜெய்நிஷாகரி, சிசாந் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரபீந்திரநாத் பாபுவின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. கந்தசாமி
(உறவினர்)

கொழும்பு விலாசம்:
No 40, Moor Road,
Wellewatte
Telephone No 074-511155

(64589)

## இக்னிசியஸ் இராஜதுரை

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்—கச்சேரி, யாழ்ப்பாணம்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் 162, பாங்சால் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இக்னிசியஸ் இராஜதுரை 04-04-1999 ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் றெஜினா பிரான்சிஸ்காவின் அன்புக் கணவரும் மீரியம் சூரியகலா (கனடா), விஜேந்திரன் (Commercial Bank, Wellawatte), சசிகலா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் குணசீலன் (கனடா), நிரஞ்சலா (வத்தளை), வசந்தகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் இம்மானுவேல், பொன்னையா (மலேசியா), முத்தம்மா (நானாட்டான்), செல்வராஜா (கொழும்பு), காலஞ்சென்றவர்களான மரியநாயகம் (கணக்காளர், கச்சேரி, யாழ்ப்பாணம்), செல்லத்துரை (P. W. D., கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி மார்க்கிறேட் றப்பாயலின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-04-99) மாலை 4-00 மணியளவில் மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டுப் பூதவுடல் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி றெஜினா இராஜதுரை
(மனைவி)

இல. 162, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

(64602)

## கிறிஸ்தோ பேதுறுப்பிள்ளை

(அப்பையா)

கொடிகாமம் கச்சாயைச் சேர்ந்த கிறிஸ்தோ பேதுறுப்பிள்ளை அவர்கள் 01-04-99 வியாழன் அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிலோமினாவின் அன்புக் கணவரும் யேசுதாசன் (ஜேர்மனி), புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினசிங்கம் (ஹொலண்ட்), அல்பிரட்டம்மா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், மேரிஜடா (ஜேர்மனி), வர்ணன் (ஜேர்மனி), மேரி அகிலா, மேரிதர்சினி, நவநீதன், ஜெனிற்றா (ஜேர்மனி), ஜெனிற்றா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும், நடினா (ஜேர்மனி), நொமினா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை காலை 10- 00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித இராயப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
புஸ்பராணி (மகள்)

கச்சாய்வீதி,
கொடிகாமம்.

(64601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூகோஸ்லாவியா விடுத்த
# யுத்த நிறுத்த அறிவிப்பு; நேட்டோ நிராகரிப்பு!

கொசோவோ கிறிஸ்தவர்களின் 'உயிர்த்த ஞாயிறு' தினத்தை ஒட்டி கொசோவோவில் யுத்த நிறுத்தம் செய்வதாக பெல்கிரேட் அரசு நேற்று முன்தினம் விடுத்த அறிவிப்பை நேட்டோ நாடுகள் நிராகரித்து விட்டன.

நேற்று முன்தினம் இரவும் நேட்டோப் படைகள் கடும் விமானத் தாக்குதல்களை கொசோவோ மீது நடத்தின.

பெல்கிரேட்டின் அறிவிப்பை நிராகரித்த அமெரிக்க அதிகாரிகள் கொசோவோ விவகாரம் தொடர்பாக 'நேட்டோ' விதித்த நிபந்தனைகள் அனைத்தையும் யூகோஸ்லாவியா ஏற்றுக் கொண்டால் மட்டுமே யுத்த நிறுத்தக் கோரிக்கையைப் பரிசீலிக்க முடியும் என்று தெரிவித்தனர்.

# அ. தி. மு. கவுடன் இனி சமரசம் கிடையாது!

அ. தி. மு. கட்சியுடன் அரசு இனிமேல் எந்தவித சமரசத்தையும் வைத்துக் கொள்ளாது என்று இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

அக்ராவுக்கு அருகே உள்ள ஜிதேஸ்வர் என்ற இடத்தில் நேற்று பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை —

நாடாளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை மத்திய அரசுக்கு ஒரு பிரச்சினையாக உள்ள போதிலும் இந்நெருக்கடியை அரசு சமாளித்து விடும் என்று உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி தெரிவித்துள்ளார்.

பாரதீய ஜனதா அரசு பதவிக்கு வந்தது முதல் அது விழ்ந்து விடும் என்று பலரும் அடிக்கடி கூறி வந்தனர். ஆனால் அது நடக்கவில்லை. அந்த வகையிலேயே இம் முறையும் மத்திய அரசு தப்பிப்பிழைத்துவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

## முதற் கட்டக் கொடுப்பனவு

உரும்பிராய், ஏப்ரல் 8

கடந்த காலத்தில் சொத்துகள் சேதமடைந்தவர்களில் முதலாம் கட்டக் கொடுப்பனவுகளைப் பெறத் தெரிவு செய்யப்பட்ட உரும்பிராய் வடக்கைச் சேர்ந்தவர்களை இன்று வியாழன் தமது காரியாலயத்தில் சமுகமளிக்கும்படி, உரும்பிராய் வடக்குக் கிராம உத்தியோகத்தர் த. தங்கராசா அறிவித்துள்ளார்.

இவர்களுக்குரிய கொடுப்பனவுகளின் விதிமுறைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் இன்று வழங்கப்படும் என அவர் கூறினார். இப்பிரிவில் 50 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் வருட 'ஏ', 'பீ' பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகின.

பரீட்சை முடிவுகள் பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் மாணவர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

(ஐ-ரீ)

## உள்ளக உடலாளர் போட்டி

சுன்னாகம், ஏப்ரல் 8

பலாலி ஆசிரிய கலாசாலை விளையாட்டு அவையால் முதலாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கென நடத்தப்படும் உள்ளக உடலாளர் போட்டி இன்று வியாழக்கிழமை 9 மணிக்கு முத்துத்தம்பி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கலாசாலை அதிபர் சோ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

(ஐ - 27)

## தையற் பயிற்சி நிலையம்

நெல்லியடி, ஏப்ரல் 8

கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் ஒன்றிணைந்து அல்வாய் மாலிசந்தியில் தையற் பயிற்சி நிலையமொன்றை கடந்த 23 ஆம் திகதி திறந்து வைத்துள்ளன.

கரவெட்டி பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கோ. குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற இப் பயிற்சி நிலையத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் [illegible] சபாபதி, நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

(ஐ-109)

## வரி விதிப்பை எதிர்த்து காஷ்மீரில் ஹர்த்தால்

ஸ்ரீநகர், ஏப்ரல் 8

இந்திய நிர்வாகத்தில் உள்ள கஷ்மீரில் அண்மையில் பல பொருள்கள் மீது விதிக்கப்பட்ட வரிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் அங்கு பெரும் வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இதனால் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

இந்த வரி விதிப்பு தொடர்பாக ஒரு மாத காலத்தில் நடக்கும் மூன்றாவது வேலை நிறுத்தம் இதுவாகும்.

சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் காஷ்மீரில் பிரிவினைவாதப் போராட்டம் ஆரம்பித்த பின்னர் பொருளாதார விடயம் தொடர்பாகப் பொது மக்கள் அங்கு நடத்திய முதலாவது போராட்டமும் இதுவே என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

## சுமார் 2 ஆயிரம்
# அமெரிக்கப் படைகள் அல்பேனியா விரைவு

நியுயோர்க், ஏப்ரல் 8

அமெரிக்கா தனது விமானப் படையின் 24 நவீன ஹெலிகளையும் 2 ஆயிரம்

உலக அரங்கில்

படையினரையும் அல்பேனியாவுக்கு அனுப்ப உள்ளதாக அறிவித்துள்ளது.

கொசோவோ மாகாணத்தில் உள்ள யூகோஸ்லாவியப் படைகள் மீதான தாக்குதல்களுக்கு உதவுவதற்காகவே அமெரிக்கா தனது துருப்புக்களை அல்பேனியாவுக்கு அனுப்பியுள்ளது.

'நேட்டோவின்' தற்போதைய நடவடிக்கையின் ஒரு பகுதியே இது என்று அமெரிக்கா கூறியுள்ள போதிலும் இது கொசோவோவில் நேட்டோவின் தரைப்படைகளைச் சேவையில் ஈடுபடுத்தும் நடவடிக்கையின் ஆரம்பமாக அமையலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

(ஐ)


**JAFFNA SCIENCE ASSOCIATION**
**PRESIDENTIAL ADDRESS**
**1999**

"HIGHER EDUCATION IN SRI LANKA AN OVER-VIEW"

by

Prof. P. BALASUNDRAMPILLAI
Vice Chancellor, University of Jaffna.

On 9th April 1999
at 1.30 p.m. (S.L. Time)
in the Kailasapathy Auditorium
University of Jaffna

ALL ARE WELCOME

General Secretary

(C/7112)



## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

[08-04-1999]



## அமரர் ஸ்ரீமான் சின்னையா நல்லையா

[மண்டைதீவு]

மலர்வு 01—01—1922 உதிர்வு 23—02—1999

ஐயிருவரைப் பெற்றாய்-உம்மை
அகிலத்தில் தெய்வமென்றோம்
ஆனந்த வாழ்வு தந்தாய்
ஆனால் இன்று.....
மீட்கிறது எம்முள்ளம் முகாரியை
ஐயனே!
தென்னாடுடைய தில்லைக் கூத்தன் திருவடியில்
எந்நாளும் இருந்து எமைக்காப்பாய்

எமது குலதெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்து பல வழிகளிலும் உதவிகள் புரிந்து ஆறுதல் அளித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று நடைபெறும் அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

இல. 17, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

[64584]



## அந்தியேட்டி அழைப்பு



தோற்றம் 11 — 08 — 1970

மறைவு 11 — 03 — 1999

செல்வி

## சுமதி இராஜரட்ணம் (B.A)

(யா/இராமநாதன் கல்லூரி, ஆசிரியை)

நாளை (9-4-99) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன வைபவத்திலும் உற்றார், உறவினர் நண்பர்களை குடும்ப சமேதராய் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனித்தனியே அழைப்பு அனுப்பமுடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

திரு. ந. சண்முகலிங்கம், ச. யோகேஸ்வரி.
வே. முத்துத்தம்பி, மு. ஈஸ்வரி
சி. வேலும்மயிலும், வே. கமலேஸ்வரி.
வே. சண்முகப்பிரியன், மு. தர்சினி.
வே. தனுசா, வே. மீரா.

"குமரேசர் இல்லம்",
விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு.

(64586)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலவாங்கினால் தாக்கப்பட்டு காயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

கொடுக்கல் வாங்கல் பிரச்சினையில் ஏற்பட்ட தகராறு அலவாங்கு அடியில் முடிந்தது.

வட்டுக்கோட்டை கோட்டைக்காடு பகுதியில் கடந்த இருநாள்களுக்கு முன் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அலவாங்கு அடிக்கு இலக்காகி சின்னத்துரை தவராசா (வயது37) என்பவரே படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

(க - 15)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சந்திரசேகரம் கைலைநேசன் ஆகிய எனது கறுப்பு கன்வெஸ்பாக் யாழ். நகரில் தவறிவிட்டது. அதற்குள் கொப்பியும். புத்தகமும், குடையும் உள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ். ஆஸ்பத்திரி முன்னால் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி, தொழில் நுட்ப நிறுவனத்தில் ஒப்படைக்கவும்.

[64574]

வோட்டஸ்வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெகநாதன் அரியமலர் ஆகிய எனது விசேட அடையாள அட்டை [இல 0902025541] 27-03-99 அன்று நாச்சிமார் கோயிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்து உதவும்படி கேடகின்றேன். [64566]

### விற்பனைக்கு

புடைவக் கடைக்குத் தேவையான மூன்று கண்ணாடி சோக்கேஸ் அலுமாரி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 31, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் [நமசிவாயம் பாடசாலை அருகில்]

[64575]

### மணமகன் தேவை

36 வயதுடைய 7 இல் செவ்வாய் படித்த அழகான பெண்ணுக்கு [ஆசிரியை] கிரக பாவம் கூடிய மணமகன் தேவை. ஜாதக விவரத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்புகொள்ளவேண்டிய முகவரி ந தியாகநாதன், 12/4, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம். [64576]

## கூ. சங்கத்தின் விசேட கிளை

வலி. வடக்கு, ஏபரல் 8

பாவனையாளர்களின் நன்மை கருதி அளவெட்டி—மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கிளை ஒன்றைத திறந்து வைத்துள்ளது.

இந்தக் கிளையில காலை முதல மாலை ஆறு மணி வரை பொருள்கள விநியோகிக்கப்படவுள்ளன

காங்கேசன்துறை வீதியில் மல்லாகம் சந்திக்கும் பங்களா வீதிக்கும் இடையில இந்தக் கிளைக்கடை திறக்கப்பட்டுள்ளது (ஐ-க-86)

யா/ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
பழைய மாணவர்கள் சங்கம்

## வருடாந்த ஒன்று கூடலும் ஆண்டுப் பொதுக்கூட்டமும்

18—04—99 ஞாயிறு காலை 9.30 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெறும் சாதாரண அங்கத்தவர்கள் வரவேற்பாளரிடம் ஆண்டு சந்தாவினை, ஆயுட்காலச் சந்தாவினைச் செலுத்தி உறுப்புரிமையைப் பெற்று நிகழ்வில் கலந்து கொள்ளலாம். ஆண்டுச் சந்தா ரூபா 25, ஆயுள் சந்தா ரூபா 250. சகல பழைய மாணவரையும் அன்புடன் அழைக்கின்றோம். நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவும் இடம் பெறும்.

த. நா. போஜன் (ச. நீ.),
சி தேவகுமாரன்.
இணைச் செயலாளர்கள்.

[சி/7110]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 09 |
| — | — |
| 09 | 03 |
| — | — |
| 1910 | 1999 |

### அமரர் சி. கந்தக்குட்டி

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் விளங்கி தன்னலமற்ற பொதுத் தொண்டு புரிந்து கடவுள் வழிபாட்டிலும், திருப்பணித் தொண்டுகளிலும் நிறைவான வாழ்வு கண்டு தனது 90 ஆவது வயது வரை இறையடி சேரும் வரையும் ஐம்புலன்கள் அணுவளவும் கெடாமல் வளம்பெற வாழ்ந்து 09—03—1999 இல் அமரரான எனது தந்தையார் சி. கந்தக்குட்டி அவர்களது இல்லத்தில் 08—04—1999 நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அந்தியேட்டிக் கிரியையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க. இரத்தினம் கி. உ,
(மகன்)
குடும்பத்தினர்.

அண்ணா சிலையடி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(சி/ 7109)

## 3 ஆவது பிறந்ததின வாழ்த்து



### செல்வி விதுர்ஷா

08—04—1999

சரஸ்வதி வீதி, கரவெட்டி மேற்கு கரவெட்டியை வசிப்பிடமாகக் கொண்ட

**ஜெயக்குமார்—சுதாசினி தம்பதிகளின் செல்வப் புதல்வி விதுர்ஷா**

தனது மூன்றாவது பிறந்த தினத்தை 08-04-99 இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, பேசாலையில் வசிக்கும், அம்மப்பா, மாமாமார், சித்திமார், கரணவாயில் வசிக்கும் அப்பப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், தம்பி விதுர்ஷன், மல்லாவியில் வசிக்கும் சித்தப்பா, சித்தி, மூத்தமாமா, சுதர்ஸன், விசுவமடுவில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அண்ணா, மன்னாரில் வசிக்கும் அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார், அத்தைமார், டோகாவில் வசிக்கும் அப்பப்பா, சவூதியில்வசிக்கும் அம்மப்பா, ஜேர்மனியில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், சித்தி, தம்பி ஜோன்சன் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் செல்வி விதுர்ஷாவை சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

த. ஜெயக்குமார்

சரஸ்வதி வீதி,
கரவெட்டி மேற்கு, நெல்லியடி.

[64579]

## அந்தியேட்டி அழைப்பு



09—03—1999 செவ்வாய்க்கிழமை சிவபதமெய்திய எமது தாயார்

### திருமதி நடராசா நாகாத்தை

அவர்களின்

சபிண்டீகரணக் கிரியைகள் 08—04—1999 வியாழக்கிழமை காலை முதல் எமது இல்லத்தில் நடைபெறும், இக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம ஈடேற்றுப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர் (டிராக்டர்- சிவா)

துன்னாலை மத்தி,
கரவெட்டி.

(சி/7085)

## மாபெரும் மலிவு விற்பனை

[ST] யாழ். சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

### புத்தாண்டு மலிவு விற்பனை

மலரும் புத்தாண்டை முன்னிட்டு பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட

ஒ சாறி ஒ ஸ்கேட் ஒ பிளவுஸ் ஒ சேட் ஒ ரீசேட்
ஒ பேபி சூட ஒ பாபறா ஒ இன்ரர் கூலர் ஒ டயனா பிறின்ட்
ஒ பட்டர் சில்க் ஒ சேட்டிங் ஒ சூட்டிங் துணி வகைகளுக்கும்
மற்றும் பலப்பல புத்தம் புதிய தரம்மிக்க வர்ண, வர்ண ஜவுளித் தினுசுகளுக்கும்

என்றும் எங்கும் கிடைக்காத மலிவு விலையில்
உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்

### சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

இல. 14, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

பிளவுஸ் பீஸ் வகைகளுக்கு!
இல. 17, நவீன சந்தை, மேல்மாடி.

சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்

### சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

தொலைபேசி இல. 021 - 2139

(சி/7111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'போர்க் கோஷம்' நடவடிக்கையில் கைதான 14 பேர் பற்றி தகவல் இல்லை

## வன்னி பிரஜைகள் குழு ஐ. நா. வுக்கு மகஜர்

வவுனியா, ஏப்ரல் 8
'போர்க் கோஷம்' படை நடவடிக்கையின்போது படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போன 14 பேரது நிலைமைகளை அறிந்து அவர்களது உறவினர்களுக்குத் தெரிவிக்கும்படி கோரும் மகஜர் ஒன்றை வன்னி மாவட்ட பிரஜைகள் குழு அகதிகளுக்கான ஐ நா தூதரகத்திடமும் மன்னார் மாவட்ட ஆயரிடமும் கையளித்துள்ளனர்.

இதேவேளை —
கடந்த மாதம் 18 ஆம் திகதி இலந்தைமோட்டையில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்ட இரண்டு பிள்ளைகளின் தந்தையான ராசதுரை செல்வனேசன் (வயது 20) என்பவரது நிலையை அறிந்து தெரிவிக்குமாறு கேட்டு அவரது உறவினர்கள் பிரஜைகள் குழு மூலம் மகஜர் ஒன்றைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளித்துள்ளனர்.

(ஐ 6)

## அதிபர் பதவி வெற்றிடம்

வலிகாமம் கல்விவலயம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கான அதிபர் பதவிக்குரிய விண்ணப்ப திகதி ஏப்ரல் 20 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலை அதிபர் பதவிக்குரிய விண்ணப்பங்களைத் தகுதியுடையவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தில் மேற்கண்ட திகதிக்கு முன் ஒப்படைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-152)

# 175 ஆண்டு நிறைவுகாணும் உடுவில் மகளிர் கல்லூரி

வலிகாமம் தெற்கு, ஏப்ரல் 8
உடுவில் மகளிர் கல்லூரியின் 175 ஆவது ஆண்டை முன்னிட்டு கல்லூரி நிர்வாகத்தினரால் பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

175 ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டங்கள் கட்டங் கட்டமாக இவ்வருடம் முழுவதும் நடைபெறவுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வாக, ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கலைநிகழ்வுகள் அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

இக்கலை நிகழ்வில் சுமார் 300-க்கும் கூடுதலான பிள்ளைகள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

175 ஆவது ஆண்டை முன்னிட்டு கல்லூரி அனுமதியில் சலுகை செய்யப்பட்டுள்ளதாக கல்லூரியின் அதிபர் தெரிவிக்கின்றார்.

அதாவது இவ்வருடத்தில் இக்கல்லூரியில் வந்து சேரும் பிள்ளைகளிடத்தில் எவ்வித மான கட்டணமும் வசூலிக்காமல் இலவசமாக அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. இச்சலுகையைப் பயன்படுத்தி கல்லூரியில் சேரும் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அதிபர் தெரிவித்தார்.

இக் கொண்டாட்டங்களை முன்னிட்டு இவ்வருடத்தில் பொருள் காட்சி, களியாட்ட விழா போன்ற நிகழ்ச்சிகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இடை நிலைப்பிரிவு, உயர் வகுப்பு நிலைகளுக்கான நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

தென்கிழக்கு ஆசியாவிலே முதல் பெண்கள் விடுதியை அமைத்து, இயங்கி பெண்கள் கல்வியில் அதிகம் ஆர்வம் காட்டி வரும் இக்கல்லூரியின் 175 ஆவது ஆண்டில், அதன் சிறப்பினை வெளிப்படுத்தும் வண்ணம் முத்திரை வெளியீடு ஒன்றை மேற்கொள்ளவும் ஆயத்தங்கள் நடைபெற்றுவருகின்றன.

இவ்வருடக் கொண்டாட்டங்களின்போது வெளிநாட்டு பிரதிநிதிகள், பழைய மாணவர்கள் பலர் கலந்துகொள்ள உள்ளனர்.


கொழும்பிலுள்ள உடுவில் மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கத்தினர் இவ்வருடம் நவம்பர் மாதம் 24 ஆம் திகதி கொழும்பு நகரில் பெரிய அளவில் கொண்டாட்டங்களை நடத்தவுள்ளனர்.

கனடா, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் இயங்கிவரும் பழையமாணவிகள் சங்கத்தினர் எதிர்வரும் மாதத்தில் அங்கு கொண்டாட்டங்களை நடத்தவுள்ளனர்.

மிஷனரி மார்களால் ஆரம்பிக்கப்பட்டு தென்இந்திய அத்தியட்சக ஆதீனத்தினரின் வழிநடத்தலில் இயங்கிவரும் இக்கல்லூரி அதன் 175ஆவது வருடக் கொண்டாட்டங்கள் அனைத்தையும் தென்னிந்திய திருச்சபை அத்தியட்சகர் அருட்திரு கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் மேற்கொண்டு வருகின்றது.

(ஐ-152)

## இன்று அகவை 60 இல்



அருள் தந்தை
**ஏ. வி. யேசுதாசன்**

அன்பு சால் குருவே
இன்று உனக்கு அறுபது
என இறும்பூது எய்துவாய்...

மேலும்
கடந்து வந்த பாதையை
கட்டாயம் இரைமீட்பாய்!

அன்று
ஆறுமுகம் சிவகாமியும்
ஆண்மகவு எனக்கண்டு
ஆரவாரம் செய்திருப்பர்!
கந்தையில் சுற்றிவைத்தாலும்
உள்ளே கசங்காத இதயம்
வைக்கோலுள் கிடந்தாலும்
நீ வைரம்!

'உடுத்துறை'யில் இருந்த உடுவை
குருவாக உருவாக்க
எடுத்தனன் தம்பிராசா அடிகள்
அலைகடலில் வழியின்றி
அலைபுவர் வழிகாட்டும்
உருவாக்க உருவாக்கினன்

நீ ஒரு காவலன்
தோட்டத்தை பாதுகாக்கும்
பணி செய் சேவகன்
அறுபது வயதில்
ஏழு தோட்டங்கள்!
இந்த தோட்டங்கள்
நட்டவனுக்கு மட்டுமல்ல
அவன் வைத்த காவலனுக்கும்
நன்றியுடையவை

'காவியங்களில் மட்டுமே
சந்திக்கக்கூடிய
சில நல்ல மனிதர்களை
வாழ்க்கையிலும் சந்திக்க நேரும்போது
வாழ்த்தக்கூட முடிவதில்லை
வணங்கத்தான் தோன்றுகிறது'

தலைவன் இயேசுவின் வழியில்
இறையரசை தேடும்
ஆயிரம் கனவுகளை வளர்த்தபடி...
முன்னேறு! முன்னேறு!

வாழ்க வளமுடன்!

**வாலிபர், பங்கு மக்கள்,
தென்னிந்திய திருச்சபை,
மானிப்பாய்.**

(சி/ 7096)

## உரக்களஞ்சியம் அமைக்க நடவடிக்கை

வலி. தென்மேற்கு, ஏப்ரல். 8
உடுவில் கமநலகேந்திர நிலையத்தில் உரக்களஞ்சியம் ஒன்றை அமைக்க யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் நடவடிக்கை எடுத்துவருகிறார்.

உணவு விவசாய ஸ்தாபன நிதித் திட்டத்தின் கீழ் மேற்படி உரக்களஞ்சியம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஐ-185)

## வீதிவிபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8
பருத்தித்துறை ஓடக்கரை, கல்லூரி வீதிச் சந்தியில் கடந்த இரு நாள்களுக்கு முன் இடம்பெற்ற, கார் — மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

பொதுமகன் ஒருவரின் காருக்கும். சீருடையினரின் மோட்டார் சைக்கிளுக்குமிடையிலேயே விபத்து இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற சீருடையினர் ஒருவரே காயமடைந்தவராவார்.

(க-15)

## இலவச திருமணப்பதிவு

வலிகாமம் தெற்கு, ஏப்ரல் 8
ஆனைக்கோட்டை - சாவற்காட்டைச் சேர்ந்த 69 தம்பதியினருக்குரிய இலவச திருமணப்பதிவினை மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினர் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

சாவற்காடு மகாத்மா காந்தி சனசமூக நிலையத்தினரின் வேண்டுகோளைத் தொடர்ந்து லயன்ஸ் கழகத்தினரால் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஐ-152)

## சீருடை விநியோகம்

வலிகாமம் தெற்கு: ஏப்ரல் 8
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான இவ்வருடத்துக்குரிய சீருடைகள் நேற்று முன்தினம் விநியோகிக்கப்பட்டன.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் வைத்து வலிகாமம் வலயப் பிரிவு இரண்டு, மூன்று பாடசாலைகளின் அதிபர்களிடம் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் அ. தற்பரானந்தன் ஆ. வி. கணேசலிங்கம் ஆகியோர் தலைமையில் சீருடைகள் வழங்கப்பட்டன.

(ஐ - 152)

## வலுக்குறைந்த மின்சாரம்

உரும்பிராய்ப் பிரதேசத்தின் ஒரு பகுதியில், இரவு வேளையில் மின்சாரம் மிகவும் வலுக் குறைந்து காணப்படுகின்றது. மின் விளக்குகள் போதிய ஒளியின்றி மின்னுகின்றன.

(ஐ-154)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திரு. விஜயசுந்தரம்
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் சின்னையா நல்லையா**


அவர்களின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் இந்நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர் ஆசிரியர், மாணவர்.
பெற்றோர், பழையமாணவர்.
கொக்குவில் இந்துக்கல்லூரி.**

(சி/7099)

## 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
08 — 10 — 1970



ஆண்டவன் அடியில்
08 — 04 — 1989

செல்வன்
**கந்தசாமி காந்தரூபன்**
(காந்தன்)

சித்தன்கேணியில் மலர்ந்த முத்தே மரகதமே
மொட்டும் மலரும் கருகும் காலம் மாறி
சிட்டுக்கள் சிறகடிக்க வட்டவிழியழகன் —நின்
பட்டுப் பாதங்களை ''காந்தீபத்தில்''
பதித்திடுவாய் என்றே கண்விழித்துக் காத்திருப்போம்.

தங்கள் பிரிவால் துயருறும்
**அன்பு அப்பா, அம்மா, தங்கைகள்.**

''காந்தீபம்'',
டச்சு வீதி,
சித்தன்கேணி.

(64237)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில்லறை தட்டுப்பாட்டை நீக்கவியாபாரிகள் தந்திரம்

வலிகாமம் தெற்கு ஏப்ரல். 8

யாழ். மாவட்டத்தில் சில்லறை நாணயக்குற்றிகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவிர்த்தி செய்ய வியாபாரிகள் விற்பனையில் சில தந்திரங்களைப் புகுத்தி வருகின்றனர்.

இவர்களின் தந்திரமான செயற்பாட்டினால் நாணயக் குற்றிகளின் தட்டுப்பாடு தவிர்க்கப்படுவதுடன் விற்பனையும் அதிகரிப்பதாகத் தெரியவருகிறது.

மருதனார்மடம் சந்தையில், ஒரு கிலோ வெங்காயம் ஏழு ரூபாவாக விற்கப்படும் போது பத்து ரூபா வழங்கினால் மூன்று ரூபா சில்லறை வழங்குவதற்குப் பதிலாக கால் கிலோ வெங்காயத்தை கூடுதலாக வழங்கி ஈடு செய்து விடுவதுடன், இதனால் கிலோவுக்கு 50 சதம் இலாபம் வாங்குவோருக்கு கிடைப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் சில்லறை நாணயங்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-152)

## 5 ஆயிரம் ரூபா கிடைக்கவில்லை

மீளக்குடியமர்ந்தோருக்கான 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு உரும்பிராய் வடக்குக் கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த பெரும்பாலான குடும்பங்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை.

இதற்கான வவுச்சர்களில் கையொப்பங்கள் பெறப்பட்டு 10 மாதங்களாகியும் இன்னும் கொடுப்பனவு வழங்காததனையிட்டு மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

(ஐ-154)

## கல்வி நிர்வாகச் செயற்பாடு குறித்து யாழ். கல்விப்பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

கல்விச் சீர்திருத்தச் செயற்பாட்டின் கீழ் யாழ். கல்வி வலயத்தில் கல்வி நிர்வாக செயற்பாட்டுக் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆரம்பக் கல்விப் பிரிவு, திட்டமிடல் பிரிவு, ஆய்வுப் பிரிவு, பயிற்சிப் பிரிவு போன்றவற்றுடன் ஆங்கிலம் தமிழ், விஞ்ஞானம், அழகியல், உடற்கல்வி, முறைசாராக்கல்வி போன்ற பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கல்விசார் அபிவிருத்தி சம்பந்தமாக ஆசிரியர், அதிபர், மற்றும் பெற்றோர்களுக்கு உதவும் நோக்குடனும் ஆலோசனை வழங்கும் நோக்குடனும் இந்தப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை உதயனுக்குத் தெரிவித்தார்.

கல்வி நிர்வாகம் தொடர்பான வழமையான நடைமுறை வேலைகளுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை விட கற்றல், கற்பித்தல், அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு ஆசிரியர், அதிபர்கள் முக்கியத்துவம் கொடுத்து செயற்படுவதற்கு புதிய கல்விச் சீர்திருத்தத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

புதிய கல்வி முறையின் முக்கிய அம்சமான பாடசாலை மட்டக் கணிப்பீடு, செயல் மூலம் கற்றல், விளையாட்டுகளும் செயற்பாடுகளும் சுற்றாடலுடன் இணைந்த கல்வி, உடற்செயற்பாடு இணைந்த குழுச்செயற்பாடு. பொழுதுபோக்கு மாணவ மாணவிகளின் ஒழுக்கம், உளவளர்ச்சி, செயற்பாட்டு நிகழ்ச்சியுடனான விளையாட்டுக்களில் ஈடுபடச் செய்தல் போன்ற அம்சங்கள் யாழ். கல்வி வலயத்தில் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரிவுகள் ஊடாக மேற்கொள்ளப்படும் என்றும் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

நூல் படிக்கும் கலாசாரம், உயர்தர வகுப்பில் வாசித்து கற்றல், பாடத்தைப் பற்றிய ஆலோசனை, செய்முறை வேலைப் பூர்த்தி, செய்முறை பிரிவு மதிப்பீடு, பிழைகள் இனம் காணப்பட்டு திருத்த யோசனைகள் வழங்குதல், மாணவரை சுயமாக சிந்திக்க வைத்தல் தொடர்பான மேலதிக முயற்சி செய்முறைப் பதிவு மதிப்பீடு, ஆசிரிய பதிவேடு பேணல், மாணவர் பதிவேடு பேணல், வலயக் கண்காணிப்பு நடவடிக்கைகளை விருத்தியாக்கல், பின்னூட்டல் செய்தல், நூல் நிலையங்களுக்கு நூல்கள் வழங்கல், மாணவர் மையக்கற்றல் ஆகிய செயற்பாடுகளும் புதிய கல்வி சீர்திருத்த செயற்பாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

(ஐ - 5)

## குழந்தைகள், தாய்மாருக்கு ஜீவாகாரம் விநியோகம்

வலி. தெற்கு, ஏப்ரல் 8

கர்ப்பவதிகள் மற்றும் போஷாக்கு குறைவுடைய பாலூட்டும் தாய்மார்களின் நன்மை கருதி உடுவில், இணுவில் போன்ற இடங்களில் உள்ள சனசமூக நிலையங்களால் இலவசமாக ஜீவாகாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

ஜீவாகாரம் வழங்குவதற்கு தேவையான நிதி சுன்னாகம் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

உடுவில் மல்வம் ஞானப்பிரகாசர் சனசமூக நிலையம் இணுவில் தெற்கு அண்ணா சனசமூக நிலையம், இணுவில் கிழக்கு கலாஜோதி சனசமூக நிலையம் ஆகியவை ஜீவாகாரத்தை வழங்கி வருகின்றன.

(ஐ-152)

# நினைவலைகள்

**31 ஆம் நாள்** **13ஆம் ஆண்டு**





அமரர்
**செல்லையா வைத்திலிங்கம்**
B Coy 2nd C. L. I., (Srilanka Army)
(ஓய்வுபெற்ற யாழ் மாநாகரசபை ஓவசியர்)

தோற்றம் 25 - 04 - 1917 மறைவு 09 - 03 - 1999

திருமதி
**வைத்திலிங்கம் தங்கமலர்**

தோற்றம் 09 - 11 - 1927 மறைவு 01 - 12 - 1986

பாடுபட்டுப் பெற்றெடுத்து பாசமெலாம் கொட்டியெமை
பீடுபெற வைத்த - அன்புப் பெற்றோரே - நீவிர்
கூடுவிட்டுப் போனாலும் - உம் குழந்தைகள் நாம் - இங்கு தினம்
வாடுகிறோம்; வருந்துகிறோம்; வணங்கியும்மை வாழுகின்றோம்;
ஆகாரமுடன் அன்புரைத்த அம்மாவே - பின்னும்
ஆதாரமாய் அரவணைத்த அப்பாவே
மருமகளாய் அன்றியெனை மகளாக மதித்தவரே
மாந்தர் தமை நேசித்து மனிதத்தை வளர்த்தவரே
நீங்கள் ஈராறு ஆண்டுடன் சேர் ஓராண்டு இடையினிலே
இவ்வுலகை விட்டகன்று இறைகழலை அடைந்தாலும்
நீறாது எம் நெஞ்ச (த்து) நினைவலைகள் உம்முடனே
நூறாண்டு வாழ்ந்து நீடு நிலைக்கும்.

பிரிவால் துயருறும்

**பிள்ளைகள்:** சாந்திகுமார், ராஜ்குமார் (லண்டன்), சுரேஸ்குமார் (நியூசிலாந்து)
**மருமகள்:** மனோகரி - சாந்திகுமார்
**சகோதரி:** இரத்தினம்மா - மாணிக்கம் (லண்டன்)
**மருமகன்:** Prof. பாலசுப்பிரமணியம் (சிங்கப்பூர்)
**மச்சான்:** கனகசபேசன் (சத்தி) குகேஸ்வரி குடும்பம் (கனடா)
**மச்சாள்:** ஜெயமணி இராசரெத்தினம் குடும்பம் (கொழும்பு)
**பேராமகள்.** பிரிதினி இரவீந்திரன் (ரவி) குடும்பம் (கொழும்பு).

''குமாரோதயம்'',
உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(64568)

## குப்பி விளக்கு தட்டுண்டு பெண் காயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

குப்பிவிளக்கு தட்டுண்டு விழுந்து உடையில் தீப்பற்றி எரிந்ததில் இளம் பெண் ஒருவர் உடலின் மேற்பகுதிபூராகவும் எரிந்து படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடிப் பகுதியில் கடந்த இரு நாள்களுக்கு முன் இடம் பெற்ற இச்சம்பவத்தில் சத்தியசீலன் யோகநாயகி(வயது 19) என்ற இளம் பெண்ணே காயமடைந்தவராவார்.

இரவு பூமாலை தொடுத்துக் கொண்டிருந்த வேளை மங்கிய குப்பிவிளக்கிற்கு எண்ணெய் விட முற்பட்ட போதே அது தவறி மடியில் விழுந்து உடையில் தீப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## இனி எவ்வழி?

அரசாங்கம் மிகவும் ஆரவாரப்படுத்திய மாகாண சபைத் தேர்தல் எதிர்பார்க்கப்பட்டதுபோல வன்முறைகள், மோசடிகள் சகிதம் நடைபெற்று முடிந்துள்ளது.

வெறும் மாகாண சபைத் தேர்தலாக-அரசாங்கத்தை மாற்றும் வலுவற்ற தேர்தலாக — இருந்த போதிலும் இத்தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே தென்னிலங்கையில் கருதப் பட்டது.

சிங்கள மக்கள் மத்தியில் உள்ள அரசியல்கட்சிகளில் பிரதானமானவையாக விளங்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகிய இரண்டில், எந்தக் கட்சிக்கு மக்கள் ஆதரவு அதிகமாக உள்ளது என்பதனை அளவிடும் மானியாக விளங்கியது.

தேர்தல் முடிவுகளை மேலோட்டமாக நோக்கினால் ஐந்து மாகாண சபைகளிலும் ஆளுங்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றுள்ளது. தனிக்கட்சியாக அதிக ஆசனங்களைப் பெற்றிருக்கிறது.

அதே போன்று முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி செய்த 4 மாகாண சபைகளிலும் ஆளுங்கட்சியே அதிக ஆசனங்களைப் பெற்றிருக்கிறது — அவற்றைக் கைப்பற்றி இருக்கிறது.

மேலும் அளிக்கப்பட்ட சுமார் 50 லட்சம் வாக்குகளில் (27 லட்சம்) 54 வீதம் ஆளுங்கட்சிக்கே கிடைத்துள்ளது. அந்த வகையில், தேர்தல் சுதந்திரமாக நேர்மையாக நடந்திருந்தால் அரசுக்கு இத் தேர்தல் வெற்றி என்று கொள்வது சரியே.

ஆனால் தேர்தல் முடிவுகளை நுணுக்கமாக ஆராய்ந்தால், ஐந்து சபைகளிலும் ஆளுங்கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் கடுமையான போட்டி நிலவுவதை காணலாம். சொற்ப ஆசனங்களே வித்தியாசம்.

1994 பொதுத் தேர்தலின் போது ஆளுங்கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையேயான வாக்கு வித்தியாசம் 3 லட்சத்து 94 ஆயிரமாகும் அனேகமாக அப்போதைய ஆதரவே இரண்டு கட்சிகளுக்கும்இப்போதும்உண்டு என்று சொல்லலாம்.

எப்படியோ, தனக்குக் கிடைத்த வெற்றியை அரசாங்கம் எப்படிக் கொள்ளப் போகிறது, எந்த அடிப்படையில் மேற்கொண்டு செயற்படப் போகிறது என்பதே இன்றைய கேள்வி.

வடக்கு — கிழக்கில்தான் நடத்தும் போரை சிங்கள மக்கள் ஆதரிக்கிறார்கள் என்று சொல்லப் போகிறதா — கொள்ளப் போகிறதா? அல்லது தனது தீர்வுப் பொதியை மக்கள் ஆதரித்துள்ளார்கள். அதனால் அதனை முன்னெடுக்க சட்டரீதியான ''புரட்சி'' ஒன்றைச் செய்வோம் என்று கூறப் போகிறதா?

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் தீர்வு ஒன்றை காணவேண்டும் என்று சிங்கள மக்கள் வாக்களித்துள்ளார்கள் என அரசு அர்த்தம் கொடுத்து அவ்வழிசெல்லுமாயின் மட்டுமே அரசு தமிழ் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரதாரராகலாம்.

# மீள்பயிற்சிபெறும் மூத்த ஆசிரியர்கள்

# 460 பேரும் இலவு காத்த கிளிகளா?

## தொடர்கல்விநெறிபற்றி அதிகாரிகள் அக்கறையின்மை

ஆசிரியர் தொடர்கல்வி மீள் பயிற்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 460-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தொடர்கல்விப் பயிற்சி நெறியில் சேர விண்ணப்பித்திருந்தனர்.

1. ஆரம்ப கணிதம், 2. ஆரம்ப விஞ்ஞானம், 3. பூரண சுகாதாரம் ஆகிய மூன்று பாடத்துறைகளில்— யாழ். இந்துக் கல்லூரி தொலைக்கல்வி நிலையம், கரவெட்டி விக்னேஸ்வரா தொலைக் கல்வி நிலையம் ஆகியவற்றில் 1997 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தொடக்கம் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் தொடர் கல்விப் பயிற்சி நெறியில் ஆசிரியர் பயிற்சியின் பின் ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்த மூத்த ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

35 வயது தொடக்கம் 49 வயது வரையுள்ள மூத்த ஆசிரியர்கள் இப்பயிற்சி நெறியில் சேர்ந்துள்ளனர். இதில் 75 சத வீதமானோருக்குமேற்பட்டவர்கள் பெண்கள்.

இப் பயிற்சி நெறிக்கான காலம் ஒரு வருடம் என்றும் சனி, ஞாயிறு விடுமுறை நாள்களில் 300 மணி நேரப் பயிற்சியை நிறைவு செய்தால் அந்தச் சான்றிதழ் ஆசிரியர் சேவைத் தர உயர்ச்சிக்கு ஏற்றுக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப் பட்டிருந்தது

மக்கள் அரங்கம்

விடுமுறை நாள்களில் செயலமர்வுகள், பாடசாலை மட்டத்தில் போதனாசிரியர்களின் வழிகாட்டற் சேவை ஆகிய இரண்டையும் பிரஸ்தாப பயிற்சி நெறி உள்ளடக்கியதாக இருக்கும் என்றும் இதற்கான பாடநூல்கள் மொடியூல்கள் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

யாழ். மாவட்டத்தில் ஆசிரியர்கள் இப்பயிற்சி நெறியில் ஆர்வத்தோடு சேர்ந்து கொண்ட போதிலும், இன்று வரை — 16 மாத காலங்கள் முடிவடைந்த போதிலும் — தேசிய கல்வி நிறுவகத்தில் யாழ். மாவட்ட ஆசிரியர்கள் பதிவு செய்யப்படவுமில்லை; அவர்களுக்கான பதிவு இலக்கங்கள் வழங்கப் படவும் இல்லை!

### ஏமாற்றம்

பாடசாலை மட்டத்திலான வழிகாட்டற் சேவைக்காக நியமிக்கப்பட்ட போதனாசிரியர்கள் ஆசிரிய சேவையிலிருந்து விடுவிக்கப்படவும் இல்லை. 460-க்கும் மேற்பட்ட மூத்த ஆசிரியர்கள் ஏமாற்றப்பட்ட நிலையில் குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் இருந்து விடுமுறை நாள்களில் செயலமர்வுகளுக்காக இரண்டு தொலைக் கல்வி நிலையங்களுக்கும் சென்று கொண்டிருக்கின்றனர்.

இதே நேரத்தில் தென்னிலங்கையில் ஆசிரியர் தொடர் கல்விப்பயிற்சி நெறி சீராக நடைபெறுகின்றது. 1998 மே மாதத்தில் அரையாண்டுப் பரீட்சை நடைபெற்றது. முதலாவது அணிக்கான பயிற்சிகள் முடிவடைந்து இரண்டாவது அணிக்கான பயிற்சி வகுப்புக்கள் 1999 ஜனவரி மாதம் தொடங்கி நடைபெறுவதாக அறிய வந்துள்ளது.

யாழ். குடா நாட்டைச் சேர்ந்த 460-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பதிவு கூட செய்யப்படாத நிலையில் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு இலவு காத்த கிளிகளாகக் காலத்தைப் போக்குவதா என்று விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த விடயத்தில் ஆசிரியர் தொழிற்சங்கங்களோ, கல்வி நிர்வாகிகளோ, தமிழ் மக்களைத் தத்தெடுத்திருக்கும் அரசியற் பீடங்களோ. தொலைக் கல்வி நிர்வாகிகளோ பொருத்தமான நட-

**சி. சத்தியதாசன்**

வடிக்கை எடுக்காதது ஏன்?

மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் அத்தி பூத்தாற் போல குடாநாட்டுக்கு வருகிறார். அவரை விடுங்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் வருகிறார்கள்; போகிறார்கள். வலயக் கல்விப் பணிப்பாளர்கள் புதிய உத்வேகத்தோடு செயற்படுவதாகச் சொல்கிறார்கள். ஆனால் 460-க்கும் மேற்பட்ட மூத்த ஆசிரியர்கள் ஏமாளிகளாக அலைந்து கொண்டு திரிவது இன்னமும் அவர்களுக்குத் தெரியவில்லை!

★

# சிவாச்சாரியர் அறிவில் ஏழ்மையாக இருந்தால்

# சமூகத்தில் செல்வாக்குப் பெறமுடியாது போகும்

## 'சிவனருளமுதம்' நூல் வெளியீட்டு விழாவில் துணைவேந்தர்

நல்லூர், ஏப்ரல் 7

தென்னிந்திய சினிமாப் படங்களும் எமது நாடகங்களும் எமது கடவுளர்களையும் சிவாச்சாரியார்களையும் மலினப்படுத்துகின்றன. நாம் அவர்களை வற்புறுத்த வேண்டும். சிவாச்சாரியார்கள் தமது அறிவை மேம்படுத்தவேண்டும். அறிவில் ஏழ்மையாக இருந்தால் சமூகததில் செல்வாக்குப் பெற முடியாத நிலை இயல்பாகவே தோன்றும்.

இவ்வாறு 'சிவனருளமுதம்' நூல் வெளியீட்டு விழாவில் தொடக்கவுரையாற்றிய யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கவலை தெரிவித்தார்.

யாழ். இந்துப் பேரவை செயலாளர் சக்திகிரீவன் எழுதிய ''சிவனருளமுதம்'' நூல் வெளியீட்டுவிழா யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் பேராசிரியர் நா. ஞானகுமாரன் தலைமையில் நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது.

துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தொடர்ந்து பேசும்போது கூறியதாவது

இந்துசமய வாழ்வு முறைதான் மிகச் சிறப்பான வாழ்வு முறை என்பதை ஏனையவர்கள் உணரக்கூடியதாக நாம் வாழவேண்டும். யாழ். குடாநாட்டில் வாழ்ந்த பத்து லட்சம் மக்களில் அரைப் பங்கினர் குடாநாட்டுக்கு வெளியில் வாழ்கிறார்கள். அதனால் சைவசமயம் இன்று மீண்டும் வீறுகொண்டு எழத் தொடங்கியுள்ளது. பல்வேறு நிலைகளில் சேதமாக்கப்பட்ட எமது கோவில்களின் புனரமைப்புக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெளிநாடுகளில் உள்ள எமது மக்களும் தாராளமாக உதவுகிறார்கள். இந்த நிலையில் சமூகத்திற்கும் எமது சமயத்திற்கும் நல்லன செய்ய வேண்டும் என்றும் விரும்பிய ஓர் இளைஞன் தன்னை அந்தப் பணிக்கு முழுமையாக அர்ப்பணித்துள்ளதுடன் சிவன் குறித்த சிறந்த நூலையும் வெளியிட்டு அதனூடாக எமது சமயத்தின் பெருமைகளை அனைவரும் தெரிந்து கொள்ள உதவியுள்ளார் — என்றார்.

### சமய உண்மைகளை விஞ்ஞான ரீதியில் ஆராய வேண்டும்

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தமது ஆசியுரையில் கூறியதாவது:-

மன அமைதியின்மை, சஞ்சலம் நிறைந்துள்ள மக்களின துயரங்கள் தீர இறைவழிபாடு இன்றியமையாதது என்பதை எடுத்துக்கூறும் வகையில் இந்த நூல் உருவாகியுள்ளது.

இளைஞர்கள் சமயப் பணிகளில் ஈடுபடுவது குறைவு. அவர்கள் சமயப் பணிகளில் ஈடுபட இவர் முன்னுதாரணமாக விளங்கட்டும்; அவரது பணி ஓங்கி வளர வேண்டும். — என்றார்.

இந்து நாகரிகத்துறைத் தலைவர் ப. கோபாலகிருஷ்ணன் பேசுகையில்—

ஒரு நூல் எத்தகைய சூழலில வெளியிடப்படுகிறது என்பதே முக்கியம். காலததின் தேவை அறிந்து சைவர்கள் சைவர்களாக வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன் அறநெறிப் பாடசாலை மாணவர்களை சைவ நெறிப்படுத்தும் நூலாக சிவனருளமுதம் வெளிவந்துள்ளது. திருமுருகாற்றுப்படை எவ்வாறு நல்ல தத்துவங்களை மக்களுக்குக் கூறுகின்றதோ அதே போன்று சிவனருளமுதமும் மக்களுக்கு நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிறது. இந்த நூலினால் பெறப்படும் பணம் ஆலயங்களின் வளர்ச்சிக்கே பயன் படுத்தப்படும்—என்று சொன்

(9 ஆம் பக்கம் பார்க்க)



## சாயி சிந்தனை

தீயவர் சேர்க்கையால் மனித வாழ்க்கை திசைமாறிப் போய்விடுகின்றது. தூசி இருக்கிறது. அது காற்றுடன் நட்புக் கொள்கிறது. அதனால் ஆகாயம் வரை உயரே போய்விடுகிறது. அதே தூசி மழை பெய்து தண்ணீருடன் சேரும்போது அடியில் போய் வண்டலாகத் தங்கிவிடுகின்றது. கீழேபோக அதற்குக் கால்கள் இல்லை. உயரே போக இறக்கைகளும் இல்லை. ஆனால், அது மேலேயோ கீழேயோ போகக் காரணம் என்ன? காற்றுடன் கொண்ட நட்பு ஆகாயம் வரையில் உயர்த்தியது. தண்ணீருடன் கொண்ட நட்பு கீழே படிய வைத்துவிட்டது. காற்று மேல்நோக்கிப் போகும் தன்மை கொண்டது. நீரோ பள்ளத்தை நோக்கித் தாழ்ந்து போகும் பண்பு கொண்டது. இந்த இயற்கைத் தத்துவப்படி மனிதன் நல்லவர்களுடன் சேர்ந்தால் உயர்வு அடைகின்றான். தீயவர்களுடன் சேர்ந்தால் தாழ்வு அடைகின்றான், ஆகையால் கெட்டவர்களைக் கண்டால் தூர விலகிப் போய்விட வேண்டும்.

ஒரு நீரிழிவு நோயாளி இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் மருந்து சாப்பிட்டால் மட்டும் போதாது. தனக்கு நன்மை தரும் உணவை மட்டுமே கட்டுப்பாடாகச் சாப்பிட வேண்டும். அதைப்போல மனிதன் உயர்வு பெறத் தீயவர்களைத் தவிர்த்தால் மட்டும் போதாது. நல்லவர்களை நாடிப்போய்ச் சத்சங்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

(நன்றி: ஞானபூமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாளை

பங்குனி 26

வெள்ளிக்கிழமை

திதி: அட்டமி பிற்பகல் 5.18 வரை.

நட்சத்திரம்: பூராடம் முற்பகல் 8.21 வரை.

சுபநேரம்: 6.07-7.37

ராகுகாலம்: 10.37-12.07

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

நாம் செய்யவேண்டிய முதற் காரியம், தவறு செய்பவர்களுக்காக வாதிடுபவர்களை இல்லாமல் செய்துவிடுவதே.

— ஷேக்ஸ்பியர்

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு டாக்டர்களை நியமிக்கக் கோரிக்கை

## ஆளுநருக்கு பிரதேசசபைத்தலைவர் கடிதம்

வலி. வடக்கு, ஏப்ரல் 8

தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் நிலவும் டாக்டர்களுக்கான பற்றாக்குறையை நீக்க நடவடிக்கையெடுக்க வேண்டும்.

வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்சரன் வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநரிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மீளக்குடியேறியுள்ள மக்களுக்கு சேவையாற்றும் வைத்தியசாலையாக இவ் வைத்தியசாலையே காணப்படுகின்றது, போதிய வைத்தியர்கள் இன்மையால் நோயாளர்கள் பல்வேறு கஷ்டங்களையும் அனுபவிக்கின்றனர். எனவே உடனடியாக தகுதியான வைத்தியர்களை நியமனம் செய்யவேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ஐ-86)

## வலிகாமம் பகுதியில்

# வாகன அனுமதிப் பத்திரம் படையினரால் சோதனை

வலி. வடக்கு, ஏப்ரல் 8

வலிகாமம் பகுதியில் 1999 ஆம் ஆண்டிற்கான மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்கள் படையினரால் பரிசோதனை செய்யப்படுகின்றன.

சுன்னாகம், உடுவில், மானிப்பாய் போன்ற இடங்களில் இராணுவத்தினர் இவ்வாறான திடீர்ப் பரிசோதனைகளை நடத்தி வருகின்றனர்.

இந்த ஆண்டுக்கான மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் பெறாதவர்களின் அடையாள அட்டைகள் பெறப்பட்டு உரிய வரியைச் செலுத்திய பின்னரே அடையாள அட்டைகளைப் பெறும்படி பணிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. (ஐ-க-86)

# வன்னியில் 90 ஆயிரம் பனை விதைகள் நடுகை

அரியாலை ஏப்ரல் 8

வன்னிப்பகுதியில் சுமார் 90 ஆயிரம் பனம் விதைகள் கிளிநொச்சி பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் நடுகை செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 30 ஆயிரம் பனம் விதைகளும், கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 30 ஆயிரத்து 550 பனம் விதைகளும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 25 ஆயிரம் பனம் விதைகளும், முல்லை மாவட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரத்து 250 பனம் விதைகளும் நாட்டப்பட்டுள்ளன

வன்னிப்பகுதியில் பனை வளத்தை அதிகரிக்கச் செய்யும் முகமாகவே பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17-15)

# தபால் ஊழியர்களுக்கு அடையாள அட்டை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

சோதனைச் சாவடிகளில் தபால் ஊழியர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் வகையில் அவர்களுக்கு அலுவலக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தபால் ஊழியர்களுக்கு கடந்த பல வருடங்களாக சீருடை வழங்கப்படாததை அடுத்து சோதனைச் சாவடிகளில் தபால் ஊழியர்களை இனங்காண்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தவிர்க்கும் முகமாக இந்தப் புதிய நடைமுறை அமுல் படுத்தப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (க—ரீ)

## வள்ளங்களில்

# பாய்மரம் போடுவதற்கு மீனவர்களுக்குத் தடை

அரியாலை, ஏப்ரல் 8

யாழ். கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் வள்ளங்களில் பாய்போட்டுச் செல்வது தடைசெய்யப் பட்டுள்ளது.

குருநகர் கொழும்புத்துறை, பாஷையூர் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு கடலில் வள்ளங்களில் பாய் போட்டு செல்வதற்கு இராணுவத்தினரால் வழங்கப்பட்ட அனுமதி நிறுத்தப்பட்டதை அடுத்து மீனவர்கள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

மீனவர்கள் தற்போது படகு வலித்துச் சென்றே மீன்பிடித்து வருகின்றனர். (ஜ-17-15)

# ஆதன இடாப்பில் பெயர் மாற்ற புதிய நடைமுறை

தென்மராட்சி ஏப்ரல் 8

யாழ். பிராந்திய உள்ளூராட்சி மன்றங்களில் ஆதன இடாப்புகளில் பெயர் மாற்றுவதற்கு புதிய நடைமுறைகளை யாழ் விலைமதிப்பீட்டுத் திணைக்கள பிரதம விலைமதிப்பீட்டாளர் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிவித்துள்ளார்.

புதிய நடைமுறைகளின் படி ஆதன இடாப்புகளில் பெயர் மாற்றுவதற்கு விண்ணப்பம் செய்வோர் ஆதனத்தின் உரிமை பற்றிய உறுதியின் புகைப்படப் பிரதிகள், பிரிவிடுவதாக இருப்பின் ஆதன வரைபடத்தின் புகைப்படப் பிரதி ஆகியவற்றை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும் எனவும், அவை சபை உத்தியோகத்தர்களால் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர் சகல படிவங்களும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு அவை பிரதம விலை மதிப்பீட்டாளரினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னரே பதிவேடுகளில் மாற்றம் செய்யப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

# கட்டாக்காலி நாய்களால் தொல்லை

தென்மராட்சி, ஏப்ரல் 8

மீசாலைப் பகுதி வீதிகளில் சொறி பிடித்த கட்டாக்காலி நாய்களினால் வீதியில் செல்வோர் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சொறி பிடித்ததால் வளர்த்தவர்களால் அடித்து விரட்டப்பட்ட நாய்களே இவ்வாறு வீதிகளில் செல்வோரைத் துரத்திக் கடித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# மழையால் தொலைபேசிகள் செயலிழப்பு

கொழும்பு, ஏப்ரல் 8

கொழும்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் நேற்று முன்தினம் கடும் மழை, இடி, மின்னல் காரணமாக தொலைபேசிப்பரிவர்த்தனை நிலையங்கள் செயலிழந்தன.

பாணந்துறை, வாதுவ, பண்டாரகம ஆகிய பகுதிகளில் இருந்த தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையங்களே செயலிழந்துள்ளன.

இதனால் 7 ஆயிரத்து 900 தொலைபேசி இணைப்புக்கள் பாதிக்கப்பட்டன.

செயலிழந்துள்ள பரிவர்த்தனை நிலையங்களை மீண்டும் செயற்பட வைக்கும் முயற்சியில் ரெலிகொம் நிறுவன பொறியியலாளர்கள் நேற்று ஈடுபட்டனர். (க-6)

# மனவிரக்தியால் குடும்பஸ்தர் தற்கொலை

தென்மராட்சி, ஏப்ரல் 8

வன்னிக்குச் சென்ற பிள்ளைகளின் வரவை எதிர்பார்த்து மனவிரக்தியடைந்த தந்தை ஒருவர் ஆலய வீதியில் உள்ள மரமொன்றில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் நேற்று முன்தினம் மீசாலை மேற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தையா செல்லையா (வயது 54) என்பவரே மரணமானவராவார்.

21 வருடங்களுக்கு முன்னர் மனைவியை விட்டுப் பிரிந்த இவர் தனது இரண்டு மகள்களையும் வளர்த்து வந்ததாகவும் இடம்பெயர்வின் போது வன்னிக்கு அவர்களை அனுப்பிவிட்டு தனிமையில் வாழ்ந்ததாகவும் —

மகள்மாரை இங்கு வருமாறு கடிதங்கள் அனுப்பியும் அவர்கள் வராததால் அவர் சில காலம் மனவிரக்தியடைந்த நிலையில் காணப்பட்டதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி திடீர்மரண விசாரணை அதிகாரி நா. தர்மேந்திரர் விசாரணை நடத்தி தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார். மீசாலை மேற்கு கிராம அலுவலர் நா. பரமசிவம் சாட்சிகளை நெறிப்படுத்தினார். (ஐ-117)

## வாசகர் திருமுகம்

# பண்டத்தரிப்புப் பக்கம் பார்வை திரும்புவது எப்போதோ?

'பண்டத்தரிப்பு — வட்டுக்கோட்டைப் பிரதான சாலையைத் திருத்துங்கள்' என 'உதயன்' மூலம் வேண்டுகோள் விடுத்த பின்பே இச் சாலை செப்பனிடப்பட்டது. அதிகாரிகளின் 'கும்பகர்ணத் தூக்கம் கலைந்தது.

மீண்டும் ஒரு வேண்டுகோள்: பொறுமையுடன் மௌனமாக இருந்தால் குடாநாட்டில் எதுவும் நடக்காது போலிருக்கிறது. எதையும் கேட்டுத்தான் பெற வேண்டும் என்பது இப்பகுதிமக்களின் தலைவிதியா?

பண்டத்தரிப்பும், அதனைச் சூழவுள்ள பிரான்பற்று, மாதகல் சில்லாலை, பனிப்புலம், வடலியடைப்புப் போன்ற கிராமங்கள் மக்கள் நன்கு குடியேறியுள்ள கிராமங்களாகும். இப்பகுதிகளுக்கு மின்சாரம் கொடுக்க எவ்வித முயற்சிகளும் இதுவரை எடுக்கப் படவில்லை. பத்திரிகையில் செய்திகள் வந்தே பல மாதங்களாகிவிட்டன.

யாழ். நகருக்கும், ஏனைய சில பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டு ஆண்டு பலவாகிவிட்டன. எமது அயற் கிராமங்கள் சங்கானை, வட்டுக்கோட்டை ஆகியன மின்சாரம் பெற்றுப் பல மாதங்களாகி விட்டன சித்தன்கேணி, பண்ணாகம், சுழிபுரம் ஆகிய கிராமங்களில் ஆக்கவேலைகள் பூர்த்தியடைந்து மின் இணைப்புக்காகக் காத்து நிற்கின்றன. இவற்றை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.

ஆனால் எமது நிலை? —2000 ஆம் ஆண்டு முடிந்த பின்புதான் 'கால்கோள் விழா' நடைபெறும் போலிருக்கிறது. வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் மின்தூண்களைப் பார்த்து இப்பகுதி மக்கள் ஏக்கப் பெருமூச்சு விட்ட வண்ணம் இருக்கின்றனர்.

'பகிர்ந்து கொடுப்பவன் பாரபட்சமின்றிப் பகிர்ந்து கொடுக்கவேண்டும். சென்ற வாரத்தில் 'வீதிகளுக்கு விளக்குப் போடவில்லை' எனச் செய்திகள் வந்திருந்தன. யாழ். குடாநாட்டில் வீதிவிளக்கு வீட்டுவிளக்குகளை விட அவசியமா? இரவில் வீதியில் சென்றால் இயமனிடமல்லவா? போய்ச் சேரவேண்டும்.

நாங்கள் கேட்பதெல்லாம் மாணவர்கள் படிக்க உதவுங்கள். 'குப்பி' லாம்பில் படிந்துப் படித்துக் குருடாகிப் போகிறார்கள் எம் இளஞ்சந்ததியினர். எதைச் செய்வதானாலும் பண்டத்தரிப்புப் பகுதியை ஏன் ஓரங்கட்டி, பதினோராம் மணிவேளையில் காரியம் முடிக்கிறீர்கள்? இங்கு உயர் அதிகாரிகள், செல்வாக்கும் சொல்வாக்கும் மிக்கோர் மின்சாரசபை ஊழியர்கள் இல்லாமை ஒரு பெரும் குறைபோல் படுகிறது.

மின்விநியோகத்துக்குப் பொறுப்பான பெரியோரே! உங்கள் பார்வையைச் சற்றுப் பண்டத்தரிப்புப் பக்கம் திருப்புங்கள். 'எல்லோரும் எல்லோமும் பெற' உதவுங்கள். அதனை எவ்வளவு விரைவில் செய்து தர முடியுமோ செய்து தாருங்கள். எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டின் முன் கிடைக்கச் செய்து, இப்பகுதி மக்களின் உள்ளங்கள் மகிழ அவர்கள் இல்லங்களில் ஒளியேற்றுங்கள். செய்வீர்களா?

**க. அ. சின்னத்தம்பி,**
தலைவர்
பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக் கழகம்

# மாமுனை வரை வாகனசேவை

எமது செம்பியன்பற்றுக் கிராமம் வடமராட்சி கிழக்கில் பின்தங்கியுள்ள பல கிராமங்களில் ஒன்று என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். இங்குள்ள பலதரப்பட்ட சிரமங்களில் போக்குவரத்து இல்லாமை தலையாய பிரச்சினையாகி உள்ளது.

செம்பியன்பற்று, மாமுனையைச் சேர்ந்த இரு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் தனியார் வாகனங்களை இங்கிருந்து பருத்தித்துறை வரை சேவையில் ஈடுபடுத்தப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டும் பயன்கிடைக்கவில்லை. அதன் பின்னர் செம்பியன்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சிற்றூர்தியை பருத்தித்துறை—செம்பியன்பற்று பாதையில சேவைசெய்யும் வண்ணம் மேற்படி சங்கத்தின் தற்காலிக தலைவராக விளங்கும் எமது பிரதேச சபைத் தலைவரைக் கேட்டுக்கொண்டோம். அதற்கிணங்கக் கடந்த பல வருடங்களாக இச்சேவை நடைபெறுகின்றது. ஆனால் இச்சேவை செம்பியன்பற்று வடக்கு மற்றும் மாமுனை வடக்கில் வசிக்கும் பெரும் எண்ணிக்கையான மக்களுக்குப் பயன்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் காரணமாக இங்குள்ள நோயாளர்கள், வயோதிபர்கள் மற்றும் பிற அலுவல்கள் நிமித்தம் பருத்தித்துறை செல்லவேண்டியவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். இதுமட்டுமன்றி. தேவைப்படும் பிரயாணிகள் சேவை இல்லாததால் சங்கத்திற்கான வருமானத்தையும் இழக்க வேண்டிய நிலையுள்ளது.

இது குறித்துப் பல முறை கடற்றொழிலாளர் சங்கத்தின் ஊடாகவும் தனிப்பட்ட ரீதியிலும் சம்பந்தப்பட்டவர்களுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டும் இதுவரை எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தப் பாராமுகம் எமது கிராம மக்களுக்கு மிகவும் மன வேதனையை ஏற்படுத்தியுள்ளது. வடமராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க நிர்வாக சபையினரும் மற்றும் பொறுப்புடையோர்களும் இதனை உணர்ந்து ஆவன செய்ய வேண்டுகின்றேன்.

**எஸ். ஜெயபாலன்.**

தனிப்பனை,
செம்பியன்பற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளுக்கான தேர்தல்

# மாவட்ட மட்ட இறுதி முடிவுகள்

## மேல் மாகாண சபை

| | கொழும்பு மாவட்டம் | கம்பஹா மாவட்டம் | களுத்துறை மாவட்டம் | தெரிவான உறுப்பினர் |
|---|---|---|---|---|
| பொ. ஐ. மு. | 3,13,576 | 3,76,176 | 1,96,702 | 44 |
| ஐ. தே. க. | 3,62,636 | 3,17,698 | 1,99,054 | 44 |
| ஜே. வி. பி. | 55,361 | 58,277 | 28,347 | 8 |
| ஸ்ரீ. மு. கா. | — | — | 7,230 | 1 |
| ம. ஐ. மு. | 43,008 | 15.492 | 7,149 | 3 |
| பு. இ. மு. | 9,140 | 8,409 | 5,427 | 1 |
| தொ. தே. ச. | 12,510 | — | 4,051 | 1 |
| மு. ஐ. வி. மு. | 5,087 | 1,347 | 567 | - |
| ஸ்ரீ. மு. மு. | 495 | 663 | 209 | - |
| லிபரல் | 1.411 | — | — | - |
| சுயேச்சை | 1,326 | — | — | - |
| பூமிபுத்திர | — | 807 | — | - |

## மத்திய மாகாண சபை

| | மாத்தளை மாவட்டம் | கண்டி மாவட்டம் | நுவரெலியா மாவட்டம் | தெரிவான உறுப்பினர் |
|---|---|---|---|---|
| பொ. ஐ. மு. | 95,115 | 2,47,250 | 79,264 | 24 |
| ஐ. தே. க. | 70,705 | 2,32,934 | 88,020 | 23 |
| ஜே. வி. பி. | 8,010 | 16,065 | 4,909 | 1 |
| தொ. தே. ச. | 9,306 | 16,954 | 69,441 | 6 |
| ம. ஐ. மு. | 1,453 | 4,433 | 811 | - |
| பு. இ. மு. | — | — | 3,541 | - |
| லிபரல் | — | 881 | — | - |
| ஸ்ரீ. மு. மு. | — | 689 | — | - |
| ம. ம. மு. | — | — | 22,896 | 2 |
| சுயேச்சை I | 516 | 853 | 462 | - |
| சுயேச்சை II | — | — | 2,031 | - |
| சுயேச்சை III | — | — | 238 | - |

## ஊவா மாகாண சபை

| | மொனறாகலை மாவட்டம் | பதுளை மாவட்டம் | தெரிவான உறுப்பினர் |
|---|---|---|---|
| பொ. ஐ. மு | 66,870 | 1,40 293 | 15 |
| ஐ தே. க. | 65,340 | 1,37,437 | 14 |
| ஜே. வி. பி. | 10,292 | 12,106 | 2 |
| பு. இ. மு. | 2 182 | — | - |
| கொ. தே. ச. | 1,927 | 19,224 | 1 |
| ம. ஐ. மு. | 419 | 1,980 | - |
| ஸ்ரீ. மு மு. | 50 | — | - |
| ம. ம. மு | — | 2,473 | - |
| சுயேச்சை (I) | 101 | 403 | - |
| சுயேச்சை (II) | 273 | — | - |

## வட. மத்திய மாகாண சபை

| | பொலன்னறுவை மாவட்டம் | அனுராதபுரம் மாவட்டம் | தெரிவான உறுப்பினர் |
|---|---|---|---|
| பொ. ஐ. மு. | 75,466 | 1 56 291 | 17 |
| ஐ. தே க. | 60,022 | 1.11 285 | 12 |
| ஜே. வி. பி. | 8,498 | 14,197 | 2 |
| ம. ஐ. மு. | 394 | 1,150 | - |
| லிபரல் | 388 | — | - |
| பூமிபுத்திர | 334 | — | - |
| பு. இ மு | — | 4,259 | - |
| மு. ஐ. வி. மு. | — | 798 | - |
| ஸ்ரீ. மு. மு. | — | 131 | - |
| சுயேச்சை | — | 861 | - |

## சப்ரகமுவ மாகாண சபை

| | இரத்தினபுரி மாவட்டம் | கேகாலை மாவட்டம் | தெரிவான உறுப்பினர் |
|---|---|---|---|
| பொ. ஐ. மு. | 1,91,502 | 1,65,041 | 20 |
| ஐ தே. க. | 1,75,912 | 1,58.503 | 19 |
| ஜே. வி. பி. | 17,200 | 15,537 | 2 |
| தொ. தே. ச. | 7,586 | 4351 | 1 |
| பு. இ. மு. | 5,047 | — | - |
| ம. ஐ. மு. | 1,624 | 1,552 | - |
| ஸ்ரீ. மு. மு. | 194 | — | - |
| லிபரல் | — | 983 | - |
| சுயேச்சை | 592 | — | - |

## குடிசைக் கைத்தொழிலை ஊக்குவிக்க கடனுதவி

நெல்லியடி, ஏப்ரல் 8

வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம், குடிசைக் கைத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்கில் வடமராட்சிப் பகுதியில் 10 ஆயிரம் ரூபா வீதம் நூறு பேர்களுக்கு 10 இலட்சம் ரூபாவை சுழற்சி முறைக் கடனாக வழங்கியுள்ளது.

பனை வெல்லம், கற்கண்டு போன்றவைகளை உற்பத்தி செய்வதற்காக வேலையற்றிருக்கும் யுவதிகளுக்கும், கணவனை இழந்த விதவைப் பெண்களுக்கும் இக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 50 பேர்களுக்கும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 50 பேர்களுக்கும் வழங்கப்பட்ட இக்கடன் 20 தடவைகளில் மீள அறவீடு செய்யப்படும்.

## கல்விக் கல்லூரிகளுக்கு மேலும் சிலருக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 8

வவுனியா, மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரிகளில் தற்போது எஞ்சியுள்ள சில வெற்றிடங்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே மேற்படி தேசிய கல்லூரிகளின் அனுமதிக்காகத் தெரிவு செய்யப்பட்ட சிலர் தமது பெயர்களைப் பதிவு செய்யத் தவறியதாகப் ஏற்பட்ட வெற்றிடங்களே தற்போது நிரப்பப்பட இருத்பதாக வவுனியா தேசிய கல்விக் கல்லூரிப் பீடாதிபதி செ. அழகரத்தினம் அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் நாளை வெளிவரும்.

[ஐ-க]

## சிவாச்சாரியர் அறி...

(ஏழாம் பக்கத் தொடர்)

னார்.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தமது உரையில் தெரிவித்ததாவது:-

நாம் இனியும் கர்ணபரம்பரைக் கதைகளை மட்டும் வைத்துக்கொண்டிருக்க முடியாது. எமது சமய உண்மைகளை விஞ்ஞான முறையில் அலசி ஆராய வேண்டும். விஞ்ஞானத்தைப் பொறுத்தவரை அது உண்மையானது. எனவே எமது சமயம் உண்மையான ஒன்று என்பதை வலியுறுத்த விஞ்ஞான ரீதியில் ஆராயப்பட வேண்டும். சமய உண்மைகளை எடுத்துக்காட்டும் இது போன்ற பல நூல்கள் வரவேண்டும். நாம் என்ன செய்தாலும் விஞ்ஞான ரீதியில் நம்பக்கூடியதாக சமயத்தை முன்னெடுக்க வேண்டும் — என்றார்.

இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி. சீ. விநாசித்தம்பி தமது ஆசியுரையைத் தொடர்ந்து நூலாசிரியர் சக்திகிரீவனுக்கு ''சிவனருட் புலவன்'' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், இந்து சமயப் பேரவையின் உபதலைவர் ஆ. மகாலிங்கம், இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன், முன்னாள் அதிபர் கவிஞர் நா. க. சண்முகநாதபிள்ளை, புலவர் வை. க. சிற்றம்பலம், நீர்வேலி கந்தசாமி கோயில பிரதம குரு சிவஸ்ரீ இராசேந்திரக்குருக்கள், எஸ். சந்திரசேகரம் உட்படப் பலர் உரையாற்றினர்.

பேராசிரியர் கோபாலகிருஷ்ணனிடம் இருந்து நூலின் முதற் பிரதியை சித்தாந்த ஞான பானு சிவஸ்ரீ சோ சுப்பிரமணியக்குருக்கள் பெற்றுக் கொண்டார்.

சிவனருளமுதம் இசை நிகழ்ச்சியும் விழாவுக்கு முன்னதாக விசேட பூசையும் பிரார்த்தனையும் இடம்பெற்றன.

[அ-103]

## யாழ். ஸ்ரேடியப்...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்றுத் தோண்டும் பணி ஆரம்பித்ததும் நில மட்டத்தில் இருந்து சுமார் இரண்டரை அடி ஆழத்தில் முதலாவது எலும்புக்கூடு மீட்கப்பட்டது.

ஐந்து அடி 4 அங்குல உயரமுடைய இந்த எலும்புக்கூடு ஒரு பெண்ணினுடையதாக இருக்கும் என்று சட்டவைத்திய அதிகாரி கருத்துத் தெரிவித்தார்.

இந்த எலும்புக்கூடு மீட்கப்பட்ட இடத்தில் உடைந்த கறுப்புநிற பிளாஸ்டிக்காப்பு ஒன்றும் காணப்பட்டது. கைகள் இரண்டும் குறுக்காக மணிக்கூட்டுப் பகுதியில் இணைந்த நிலையில் மேல் நோக்கிப் பார்த்தபடி எலும்புக் கூடு காணப்பட்டது. கால்களின் அடிப்பாதப் பகுதி இரண்டும் கூட மிக நெருக்கமாகக் காணப்பட்டன. அதனைப் பார்க்கும் போது கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் புதைகுழியின் மேற்புறத்தில் போடப்பட்ட சடலம் இதுவாக இருக்கும் என்று கருதமுடிகின்றது.

பகல் 12-20 மணியுடன் மதிய உணவுக்காக நிறுத்தப்பட்ட அகழ்வு வேலைகள் மீண்டும் 2-30 மணிக்கு ஆரம்பமாகின.

அப்பொழுதே ஏனைய இரு எலும்புக் கூடுகளும் மீட்கப்பட்டன. முதலில் முழுமையாக மீட்கப்பட்ட எலும்புக் கூட்டுக்குக் கீழே இந்த இரு எலும்புக் கூடுகளும் ஒன்றாகக் கிடக்கக் காணப்பட்டன. அவை ஆண்களுடையவையாக இருக்கக் கூடுமென்று சட்ட வைத்திய அதிகாரி கருத்துத் தெரிவித்தார்.

இந்த எலும்புக் கூடுகள் இரண்டும் முழுமையாக மீட்க முடியாத நிலையில் துண்டு துண்டுகளாகவே மீட்கப்பட்டன.

கட்டடத் தொழிலாளர்கள் வெட்டிய குழி நேற்று சுமார் மூன்றடிக்கு நான்கடி என்ற அளவில் அகலப்படுத்தப்பட்டு சுமார் மூன்று அடி ஆழப் படுத்தப்பட்ட நிலையிலேயே மூன்று எலும்புக் கூடுகளும் மீட்கப்பட்டன. மேலும் மூன்று எலும்புக் கூடுகள் இருப்பதை ஆய்வாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். குழியின் [illegible] எலும்புக்களின் [illegible] தெரிகின்றன.

புதைகுழிப் பகுதி ஆழமாகவும் பரந்து விரிவுபடுத்தியும் தோண்டப்படும்போது மேலும் பல எலும்புக்கூடுகள் வெளிக்கிளம்பும் எனக் கருதப்படுகிறது.

தோண்டும் பணி இன்று வியாழக்கிழமையும் யாழ். மேலதிக நீதிவான் ஏ. நாதன் முன்னிலையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட விருக்கின்றது.

கிண்டி எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளை — மேலதிக ஆய்வுகளுக்காக — கொழும்புக்கு முழுமையாக அப்படியே எடுத்துச் செல்ல முடியாதிருப்பதால் அதனை பகுதி பகுதியாக பொலித்தீன் பைகளில் பொதி செய்து கொழும்புக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

எலும்புகள் உக்கி, தனித்தனியாக நொருங்கும் நிலையில் இருப்பதைப் பார்க்கும் போது பத்து வருடங்களுக்கு முன்னர் புதைக்கப்பட்டவையாக அவை இருக்கக் கூடும் என்று சட்ட வைத்திய அதிகாரி கருதுகின்றார்.

கட்டடத் தொழிலாளர்கள் மலசல கூடக் கட்டுமாணப் பணிக்காக நிலத்தைத் தோண்டிய போது இந்தப் புதைகுழி பற்றிய விவரம் முதலில் தெரியவந்தது தெரிந்ததே.

தொழிலாளர்கள் கட்டுமானப் பணிக்காக குழியை வெட்டியபோது அப்பகுதியில் ஆகக்குறைந்தது மூன்று சடலங்களின் எலும்புக் கூடுகளின் பெரும்பகுதி அகற்றப்பட்டு விட்டதாகத் தாம் கருதுவதாக சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

(இ-3-139-15-173-5)

## ஒரு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்)

மத்திய மாகாண சபையில் உள்ள 56 ஆசனங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 24 ஆசனங்களை மட்டுமே பெற்றுள்ளது. ஆட்சி அமைக்க அமைச்சர் தொண்டமான் தலைமையிலான இந்திய வம்சாவழி மக்கள் பேரவையின் ஆதரவைப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பெற வேண்டிய நிலையில் இருந்து வருகிறது. இந்திய வம்ச வழி மக்கள் பேரவை ஆறு ஆசனங்களை இங்கு பெற்றுள்ளது.

சப்பிரகமுவ மாகாண சபையில் உள்ள 42 ஆசனங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 20 ஆசனங்களைப் பெற்றுள்ளது. அங்கும் அமைச்சர் தொண்டமான் தலைமையிலான இந்திய வம்சாவழி மக்கள் பேரவைக்குக் கிடைத்த ஓர் ஆசனத்துடன் சேர்த்தே ஆட்சி அமைக்க வேண்டி நிலை பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஏற்பட்டுள்ளது.

ஊவா மாகாண சபையில் உள்ள 32 ஆசனங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 15 ஆசனங்களைப் மலையக வம்சாவழி மக்கள் பேரவையின் ஆதரவுடனேயே ஆட்சி அமைக்க வேண்டிய நிலை அதற்கு ஏற்பட்டுள்ளது.

மேல்மாகாண சபையில் உள்ள 104 ஆசனங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 46 ஆசனங்களை மட்டுமே பெற்றுள்ளது அங்கும் அமைச்சர் தொண்டமான் தலைமையிலான வம்சாவழி மக்கள் பேரவை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் உதவியுடன் ஆட்சி அமைக்கப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முயலும் என்று நம்பப்படுகின்றது. அந்த இரு கட்சிகளும் தலா ஒவ்வொரு இடங்களையே பெற்றுள்ளன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சி அமைத்தாலும் அந்த ஆட்சி நிரந்தரமாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. எட்டு ஆசனங்களைப் பெற்ற ஜே. வி. பியின் ஆதரவைப் பெறப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முயலலாம் என்று கூறப்படுகிறது.

ஜே. வி. பி. மூன்றாவது அரசியல் சக்தியாக உருவாகி இருப்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுவதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

[இ-3-6-7-க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## NIRU TUITION CENTRE

Station Road, Kondavil.

A/L 2001 — நிலையியல் — ஆரம்பம்:- 09-04-99 வெள்ளி 3.30 P.M.

A. பத்மநாதன்

(64555)


# நேர்முகப் பரீட்சை

யாழ். பிராந்திய உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் வருமான மேற்பார்வையாளர்களை வருமான பரிசோதகர் தரம்II-க்கு பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை யாழ். செயலக மேலதிக அரச அதிபர் அலுவலகத்தில் ஏப்ரல் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ரீ. வீ. கிருஷ்ணசாமி சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இது குறித்து அறிவித்துள்ளார்.

வடக்கு —கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதியுடன் இப்பரீட்சை இங்கு நடைபெறுகிறது. (க-117)

# ஊழியர் தாக்கப்பட்டார்

இலங்கை மின்சாரசபையின் ஜெனரேற்றர் இயக்குநர் ஒருவர் இரவு வேளை கடமை நேரத்தில் இனம் தெரியாத நபரினால் தாக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த 31 ஆம் திகதி இரவு 7 மணியளவில் உடுப்பிட்டி நாவலடிப் பகுதியில் இடம் பெற்றது. ஜெனறேற்றர் இயக்குநரான கரவெட்டியைச் சேர்ந்த கு.பாஸ்கரதுங்கன்[வயது41] என்பவரே தாக்கப்பட்டவராவர். இது குறித்து வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையத்தில் புகாரிடப்பட்டுள்ளது. (ஐ-10)

# மரண அறிவித்தல்

## சரவணமுத்து சோமசுந்தரம்

(முன்னாள் கிராமசேவையாளரும், ஆவரங்கால் நடராச இராமலிங்க சிவன் தேவஸ்தான தர்மகர்த்தா சபைத் தலைவரும்)

ஆவரங்கால் சிவன் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து சோமசுந்தரம் 07 - 04 - 99 நேற்று புதன்கிழமை மாலை 6 மணியளவில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் திரு. திருமதி கந்தையா சரவணமுத்துவின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், பண்டிதர் சுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரனும், வரதராசா (சுவிஸ்), கலைவாணி, விஜயலட்சுமி (டென்மார்க்), தனலட்சுமி (மீசாலை வடக்கு), யோகலட்சுமி (ஆசிரியை, யா / ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்), தியாகராஜா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், க. இராசதுரை (கிராம உத்தியோகத்தர், புத்தூர் வடக்கு), ந. பூபாலசிங்கம் (டென்மார்க்), ச. ஞானச்சந்திரன் (டச்சு வீதி, மீசாலை வடக்கு), கலாவதி (டென்மார்க்), யசோதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், யா/ பரியோவான் கல்லூரி மாணவர்களான இ. சிவகணேசன், இ. சிவசங்கர், இ. சிவப்பிரியா (யா/ ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம்), இ. சிவகாமி (யா/ வேம்படி மகளிர் உயர் கல்லூரி), மீசாலை வடக்கிலுள்ள ஞா. பிருந்தா, ஞா. பிரசாந்த், ஞா. உமேசன், ஞா. ரமேசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 08-04-99 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் ஆவரங்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. இராசதுரை
(கிராம அலுவலர், புத்தூர் வடக்கு)
ச. ஞானச்சந்திரன்
(டச்சு வீதி, மீசாலை வடக்கு)

சிவன் வீதி,
ஆவரங்கால்.

(64600)

# பொ. ஐ. முன்னணி...

(முதலாம் பக்கத் தொடர்)

வருகின்றது. அதேநேரத்தில் ஜே. வி. பியின் செல்வாக்கு அதிகரித்து வருகின்றது.

இந்த தேர்தல் முடிவை நோக்கும் போது அரசாங்கம் இந்த வருடத்திலோ, அடுத்த வருடத்திலோ ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தேர்தல்களை முன் கூட்டியே நடத்தும் சாத்தியம் இல்லை என்று அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டனர்.

அரசாங்கத்தின் உயர்மட்ட தலைவர்களின் சொந்தத் தொகுதிகளில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கான ஆதரவு சரிந்துள்ளதை இந்தத் தேர்தல்கள் காட்டுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.


எமது புதிய
வீடியோ வெளியீடு!
Dr. ராஜசேகர், ரோஜா
நடித்த
மக்களுக்காக
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/7119)



# தொலைத் தொடர்பு சேவை

அமைதியான சூழலில் தங்குமிடவசதியுடன் குறைந்த செலவில் எந்த நேரமும்

உள்நாட்டு வெளிநாட்டு தொலைத் தொடர்பு சேவைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்.

## நிஷா கொமினிகேசன்

(V. V. S.)

டச்சு றோட், சாவகச்சேரி.

T. P. No: உள் நாடு 070 - 212414
வெளி நாடு 0094 - 70 - 212414

(64562)



# NEW SCIENCE COLLEGE

JAFFNA.

## இணைந்த கணிதம்

| | |
|---|---|
| A/L 2000 | காவிகள் ஆரம்பம் 10-4-99 (சனி, ஞாயிறு 7-30 a. m.) |
| A/L 2001 | இருபடிச்சமன்பாடு ஆரம்பம் 10-4-99 (சனி, ஞாயிறு 11-30 a. m.) |
| A/L 99 | APPLIED புள்ளிவிவரவியல் ஆரம்பம் 10-4-99 சனி, ஞாயிறு 3-00 p. m. |
| A/L 1999 | PURE வட்டம் ஆரம்பம் 08-4-99 செவ்வாய், வியாழன் 6-30 a. m. |

A. பத்மநாதன் (64556)



SALE! SALE!!

# இதோ! முந்துங்கள்

உள்ளம் துள்ளும் புதுவருடப் பரிசு

# மகாநதி

வழங்கும்

## மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

இந்தள்ளுபடி 14 - 04 - 99 வரை மட்டுமே!

நதிகளின் சங்கமம் கடலில்
சகலவித புடைவைகளின் சங்கமம்

## மகாநதியில்

புதிது புதிதாய்ப் பூத்திருக்கும்
புதுவருட புடைவைகளுக்கு
ஆம்

# மகாநதி புடைவை அகம்

முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு
கைராசியான நிறுவனம்

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021-2552

4, நவீன சந்தை.
சாவகச்சேரி.

சாறி பிளவுஸ் பீஸ், துணி வகைகளுக்கு
பிரத்தியேக காட்சி அறைகள்

16, நவீன சந்தை,
[மேல் மாடி]
யாழ்ப்பாணம்.

IKUF, நவீன சந்தை,
[மேல் மாடி]
சாவகச்சேரி.

(சி/7114)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 08 — 04 — 1912

மறைவு 09 — 03 — 1999

அமரர்

## ஆறுமுகம் குமாரசாமி

09—03—99 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகளும், ஆத்ம சாந்திப் பூசைகளும் அவரது இல்லத்தில் இன்று நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

உரும்பிராய் தெற்கு.

[64529]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08-04-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org